Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.107/2025

Dated 08-07-2026
Deposition of witness for : PW 9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்திகேயன் | வயது | : | 44 |
| தந்தை பெயர் | : | கணேசன் | தாலுக்கா | : | ஒரத்தநாடு |
| கிராமம் | : | ஒரத்தநாடு | தொழில் | : | அரசு மருத்துவர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

Ld. Defense **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

நான் தற்போது தஞ்சை மருத்துவகல்லூரி மருத்துவமையில் பொது அறுவை சிகிச்சை பிரிவில் மூத்த உதவி பேராசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.06.2018 அன்று இரவு 10.33 மணியளவில் 77 வயது மதிக்கதக்க கலியபெருமாள் என்பவர் தன்னை சிலர் தாக்கியதாக கூறி மருத்துவமணையில் உள்நோயளியாக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் தலையின் உச்சி பகுதியில் கிழிந்த காயம் 7x2x . 5 செ.மீ அளவுள்ள கிழிந்த காயமும் இடது முன் கை பகுதியில் 4x2 செ.மீ. சிராய்ப்பு காயமும், நெஞ்சு நடுவில்

2x2 செ.மீ. சிராய்ப்பு காயமும் வலது கை பகுதியில் 1x.5 செ.மீ. சிராய்ப்பு காயமும் ஏற்பட்டிருந்தது. அந்த காயங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இது சம்பந்தமாக காயம்பபட்டவருக்கு சி.டி.ஸ்கேன் மூளை பகுதிக்கும், முகப்பகுதிக்கும், மார்பக பகுதி, வயிற்றி பகுதி எடுக்கப்பட்டது. காயம் ஏற்பட்டவருக்கு மூளை நரம்பியல் நிபுணர், எலும்பு முறிவு அறுவை சிகிச்சை நிபுணர், ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை நிபுணர், நெஞ்சு அறுவை சிகிச்சை நிபுணர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது. வலது கால் பகுதியில் எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. இவர்களின் பரிந்துரையின் படி காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று சான்று அளித்துள்ளேன். காயச்சான்று இதுதான். அது **அ.சா.ஆ.9** ஆக குறியிடு செய்யப்படுகிறது. அ.சா.பொ.3 கல், மற்றும் கட்டையால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்புள்ளதா என்றால் வாய்ப்புண்டு.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

மேற்சொன்ன காயங்கள் ஒரு நபர் வேகமாக வாகனத்தில் செல்லும்போது தடுமாறி கீழே விழும்போது ஏற்பட வாய்புள்ளதா என்றால் உள்ளது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.07.08 16:58:02 +0530

முதன்மை மாவட்ட (ம) அமர்வு நீதிபதி

தஞ்சாவூர்,